<u>**கூடுதல் சார்பு நீதிமன்றம், காஞ்சிபுரம்**</u>

நாள் 27.02.2026

அசல் வழக்கு எண். 208/2012

பி.சா.1 – ஜோசாப் , த/பெ. சூசைராஜ்

சாட்சி சத்யபிரமாணம் செய்து வைக்கப்பட்டார்

<u>**குறுக்கு விசாரணை தொடர்ச்சி**</u>

இந்த வழக்கு தாக்கல் செய்வதற்கு 9 ஆண்டுகளுக்கு முன்பாக வீடு கட்டி விட்டீர்கள் என்றால் சரியில்லை. உங்கள் எதிர் வழக்குறையில் வீடு கட்டியதாக சொல்லி உள்ளது சரியா என்றால் சரிதான். உங்களுடைய மூதாதையர் நிலம் பூதனூரில் இருந்தது என்றான் சரிதான். அனைத்து சொத்துக்களும் கூட்டாக இருக்கிறது என்றால் சரிதான். 2010ல் உங்கள் குடும்பத்திற்குள் விடுதலை பத்திரம் எழுதினீர்கள் என்றால் சரிதான் பூதனூர் சொத்தை எழுதவில்லை. விடுதலை பத்திரம் தாவா சொத்து குறித்து மட்டுமே எழுதப்பட்டது என்றால் சரிதான். வா.சா.ஆ4 என் தந்தையார் தனி பட்டாவாக வந்து பாகப்பிரிவினை மூலம் வந்து உங்கள் அப்பா விற்பனை செய்தது கண்டுள்ளது என்றால் சரிதான். அந்த சொத்து பூதனூர் சொத்து என்றால் சரிதான். வா.சா.ஆ5 என் தந்தையார் தனி பட்டாவாக வந்து பாகப்பிரிவினை மூலம் வந்து உங்கள் அப்பா விற்பனை செய்தது கண்டுள்ளது என்றால் சரிதான். அந்த சொத்து பூதனூர் சொத்து என்றால் சரிதான். வா.சா.ஆ.6 என் தந்தையார் தனி பட்டாவாக வந்து உங்கள் அப்பா விற்பனை செய்தது கண்டுள்ளது என்றால் சரிதான். அந்த சொத்து பூதனூர் சொத்து என்றால் சரிதான். கடந்த சரியில்லை. 1975 மற்றும் 1976 ஆண்டுகளில் எழுதப்பட்ட பத்திரங்களின் பாகப்பிரிவினை என்று கண்டுள்ளது என்றால் சரியில்லை. பூதனூர் சொத்து உங்கள் அப்பா பெயரில் எப்படி தனிப்பட்டா கொடுத்தார்கள் என்றால் அவர்கள் ஆண்டு

அனுபவித்தது ஆகவே பட்டா கொடுத்தார். உங்கள் அப்பா கிரயம் வாங்கினாரா என்றால் கிரையம் அந்த சொத்தை வாங்கவில்லை. உங்கள் அம்மா உங்கள் அப்பாவுக்கு தான பத்திரம் ஏதேனும் எழுதி கொடுத்தாரா என்றால் எழுதிக் கொடுக்கவில்லை. உங்கள் தாத்தா மரியண்ண ரெட்டி மற்றும் பாட்டி மதினாஅம்மாள் ஆகியோர் உங்கள் அப்பாவிற்கு ஏதேனும் செட்டில்மெண்ட் ஆவணம் எழுதி கொடுத்தார்களா என்றால் எழுதிக் கொடுக்கவில்லை. பூதனூரில் இருந்த சொத்து மரியண்ண ரெட்டிக்கு சொந்தமானது என்றால் சரிதான் பூர்விக சொத்தாகும். மரியண்ண ரெட்டி உயில் எதுவும் எழுதவில்லை என்றால் சரிதான். உங்கள் தகப்பனார் சூசை ராஜ், வாதியின் தகப்பனார் ஆரோக்கியசாமி , மற்றும் அருள் தந்தை அந்தோணிசாமி மற்றொரு சகோதரர் பிலிப் ஆகிய நான்கு பேரும் ஒரு தாய் வயிற்றில் பிறந்த உடன் பிறந்த சகோதரர்கள் என்றால் சரிதான். உங்கள் அப்பா விற்பனை செய்யும் பொழுது மற்றவர்களிடமிருந்து விடுதலை பத்திரம் ஏதேனும் வாங்கினாரா என்றால் வாங்கவில்லை. உங்கள் அப்பா பெயரில் தனிப்பட்ட வகையில் பட்டா வாங்குவதற்கு ஆதரவாக என்னென்ன ஆவணங்கள் கொடுத்தார் என்றால் எனக்கு தெரியாது. இந்த சொத்துக்கு யூடிஆர் பட்டா வழங்கப்பட்டதாக சொல்கிறீர்கள் அதற்கு ஆதரவாக என்ன என்ன ஆவணங்கள் கொடுத்தீர்கள் என்றால் வீட்டு வரி, மின் இணைப்பு ரசீது கொடுத்தோம். யூடிஆர் பட்டா வழங்கப்பட்ட பட்டா வழங்கப்பட்ட பட்டாவை ஏன் தாக்கல் செய்யவில்லை என்றால் பட்டா வழங்கவில்லை விண்ணப்பம் தான் கொடுத்துள்ளோம். 2007 ஆம் ஆண்டு முதல் வரி கட்டியதாக பதிலில் சொல்லி உள்ளீர்கள் அது சரியா என்றால் சரிதான். கடந்த 2007 ஆம் ஆண்டுக்கு முன்பாக வரி கட்டிய ரசீதுகளை

நீதிமன்றத்தில் தாக்கல் செய்து உள்ளீர்களா என்றால் தாக்கல் செய்யவில்லை. 2007ஆம் ஆண்டு முதல் நீங்கள் ஆண்டு அனுபவித்து வருவதாக சொல்கிறீர்கள் அதற்கு உங்கள் வாய்மொழி சாட்சியம் தவிர வேறு ஆவணங்கள் எதுவும் இல்லை என்று சொன்னால் சரிதான். உங்கள் தந்தையாரின் சகோதரர்களுக்கு இடையே எந்த ஏற்பாடு செய்யப்பட்டது என்றால் எந்தவிதமான ஏற்பாடும் செய்யவில்லை பிரித்துக் கொள்ளவில்லை. 1975–1976 காலகட்டத்தில் உங்கள் தந்தையார் கிரயம் செய்ததாக சொல்கிறீர்கள் அந்த காலகட்டத்தில் மற்ற சகோதரர்கள் அதற்கு ஆட்சேபனை ஏதாவது தெரிவித்தார்களா என்றால் நான் அப்பொழுது பிறக்கவில்லை எனக்கு தெரியாது. உங்கள் அப்பா சூசை ராஜ் என்பவர் கடந்த 2001 ஆம் ஆண்டு கடைசியாக ஒரு சொத்தினை விற்பனை செய்தார் என்றால் சரிதான். அப்பொழுது அந்தோணிசாமி, பிலிப் ஆகியோர் ஆட்சேபனை செய்தார்களா என்றால் ஆட்சேபனை செய்தார்கள். எழுத்துப்பூர்வமாக ஆட்சேபனை செய்தார்களா என்றால் இல்லை வழக்கு பூர்வமாக ஆட்சேபனை செய்தார்களா என்றால் இல்லை. வாய்மொழியாக ஆட்சேபனை செய்தார்கள். ஆரோக்கியசாமி பிலிப் அவர்கள் தனிப்பட்ட வகையில் நிலங்களை விற்பனை செய்தார்கள் என்றால் சரிதான். மேற்படி இரண்டு நபர்களும் விற்பனை செய்ததற்கு நீங்களோ அல்லது உங்கள் தந்தையோஆட்சேபனை செய்யவில்லை என்றால் ஆட்சேபனை செய்தோம். உங்கள் தந்தையார் ஆட்சேபனை செய்தாரா என்றால் ஆட்சேபனை செய்தார். நீங்கள் ஆட்சேபனை செய்தீர்களா என்றால் ஆட்சேபனை செய்தேன். எந்த வருடம் ஆட்சேபனை செய்தார்கள் என்றால் 1999 ஆட்சேபனை செய்தோம்.

1999 ஆம் ஆண்டு எழுத்துப்பூர்வமாக ஆட்சேபனை செய்யப்பட்டதா என்றால் இல்லை. 1997 ஆம் ஆண்டு உங்கள் அப்பா தனியாக ஒரு சொத்தினை விற்பனை செய்தார் என்றால் அது எனக்கு ஞாபகம் இல்லை. உங்கள் அப்பா கடந்த 1997 ஆம் ஆண்டு பொது அதிகாரம் எழுதிக் கொடுத்துவிட்டு 1999 ஆம் ஆண்டு ஆட்சேபனை செய்தார் என்றால் சரியில்லை. உங்கள் அப்பா பொது அதிகாரம் கொடுத்து விற்பனை செய்தார் என்றால் சரிதான். கடை கட்டுவதாக வீடு கட்டுவதாக சொல்கிறீர்கள் அதற்கு அங்கீகாரம் வாங்கினீர்களா என்றால் வாங்கினோம். எந்த வருடம் வாங்கினீர்கள் என்றால் வழக்கு தாக்கல் செய்வதற்கு முன்பாக வாங்கினோம். தோராயமாக தெரியுமா என்றால் சரியாக ஞாபகம் இல்லை. நீங்கள் கூறுவதுபோல் 1987 ஆம் ஆண்டு வீடு இருந்தது என்று சொல்வது தவறு என்றால் சரியில்லை. அது மாட்டு கொட்டாயாக இருந்தது. நீங்கள் குடும்பம் இருந்தது சென்னையில் என்று சொன்னால் சரி இல்லை பால்நல்லூரில் குடும்பம் இருந்தோம். என்ன வேலையில் இருக்கிறீர்கள் என்றால் மருத்துவ உதவியாளராக இருக்கிறேன். பி.சா.ஆ2ன் படி கடந்த 2011 முன்னிலைக்கு நீங்கள் கட்டிடம் கட்ட விண்ணப்பித்து இருந்தீர்கள் அதற்கு முன்பாக அங்கு வீடு கட்டவில்லை என்றால் சரியில்லை.கடந்த 2011 ஆண்டு விண்ணப்பம் கொடுத்தீர்கள் என்றால் 2007 ஆம் ஆண்டு கொடுத்தேன். 2007 ஆம் ஆண்டு வரைபட விண்ணப்பம் அளித்ததற்கு என்ன ஆதாரம் தாக்கல் செய்து உள்ளீர்கள் என்றால் வீட்டு வரி தாக்கல் செய்துள்ளேன். வீட்டு வரி 2017 முதல் 2022 வரை ஒரே ரசீதாக பணம் கட்டி வழக்கிற்கு பின்னிட்டு தாக்கல் செய்து உள்ளீர்கள் என்றால் சரிதான். நில ஒப்படைப்பு மூலமாக

**உங்கள் தந்தையாருக்கு கொடுக்கப்பட்டது என்று சொல்லி இருந்தால் அது தவறு என்றால் சரிதான். வழக்கு சொத்து இருக்கும் உங்களுக்கும் சம்பந்தம் கிடையாது. வாதியின் தந்தையார் அவர்களுக்கு பறிபூரணமாக பாத்தியப்பட்டது என்று சொன்னால் சரியில்லை.**

Type written by the Typist in Open Court to my Dictation and to my hearing read over and typo graphed to the witness and acknowledged by him / her to be correct.

Sd/- T.Thirumal,
Additional Subordinate Judge,
Kancheepuram